## சுருக்கம்

தொழிலாளர் துறை – நல வாரியங்கள் – அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான நல வாரியங்களின் அலுவலகங்கள் அனைத்தையும் கணினி மயமாக்குதல் – நிதிச் செலவினம் - ஒப்புதல் அளிக்கப்படுகிறது – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ1) துறை**

**அரசாணை (நிலை) எண்.9** **நாள்.4/02/2008.**

**படிக்கப்பட்டது:-**

1. அரசாணை (நிலை) எண். 198, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 4.10.1994.
2. அரசாணை (நிலை) எண். 35, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 17.3.1999.
3. அரசாணை (நிலை) எண்.164, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 7.6.2004.
4. அரசாணை (நிலை) எண். 73, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 1.9.2006.
5. அரசாணை (நிலை) எண். 74, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 1.9.2006
6. அரசாணை (நிலை) எண்.12, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள். 22.1.2007.
7. அரசாணை (நிலை) எண்.25, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள். 8.2.2007.
8. அரசாணை (நிலை) எண்.199, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.8.10.2007.
9. அரசாணை (நிலை) எண்.200, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.8.10.2007.
10. சென்னை, தமிழ்நாடு மின்னணுவியல் கழகம், முதுநிலை மேம்பாட்டு மேலாளரின் கடிதம் எண். எஸ்.டபிள்யூ.ஜி/192/லேபர்/2007, நாள் 1.8.2007.
11. சென்னை, தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண்.செ3/17910/2007, நாள் 17.8.2007.
12. சென்னை, தமிழ்நாடு மின்னணுவியல் கழகம், முதுநிலை மேம்பாட்டு மேலாளரின் கடிதம் எண். எஸ்.டபிள்யூ.ஜி/டி.சி.டபிள்யூ.டபிள்யூ.பி/192/2007,நாள்12.10.2007.

------------

**ஆணை:**

மேலே 1, 2, 4, 5 மற்றும் 6 -ல் படிக்கப்பட்டுள்ள அரசாணைகளின் படி கீழ்காணும் 14 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் நிறுவப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது:-

(1) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்,
(2) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்,

(3) தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம்,
(4) தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம்,
(5) தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம்,
(6) தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம்,
(7) தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம்,
(8) தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம்,
(9) தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு நெசவுத்தொழிலாளர்நல வாரியம்,
(10) தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியம்,
(11) தமிழ்நாடு ஓவியர் நல வாரியம்,
(12) தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம்,
(13) தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம்,
(14) தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம்.

2. 2007–2008–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள் பயனாளிகளுக்கு விரைந்து சென்றடைய அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் அலுவலகங்கள் அனைத்தும் கணினி மயமாக்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

3. மேற்கூறப்பட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களை ரூ. 671.45 இலட்சம் மதிப்பீட்டில் கணினி மயமாக்குதல் குறித்த கருத்துருவை தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் (ELCOT) தயாரித்த செயல்திட்டத்துடன், மேலே 11-ல் படிக்கப்பட்ட கடிதத்தில் தொழிலாளர் ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

4. மேலே பத்தி இரண்டில் கூறப்பட்டுள்ள மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், மேலே பத்தி மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மின்னணுவியல் கழகத்தால் தயாரிக்கப்பட்ட செயல்திட்டம் மற்றும் தொழிலாளர் ஆணையரின் கருத்துரு ஆகியவை அரசால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. அதன் படி, தொழிலாளர் துறையின் கீழ் வரும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் 13 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் அலுவலகங்கள் அனைத்தையும் தமிழ்நாடு மின்னணுவியல் கழகத்தின் செயல்திட்டத்தின் அடிப்படையில் அக்கழகம் மூலமாக மொத்த நிதிச்செலவினமாக ரூ.**5,01,44,222/–க்கு (ரூபாய் ஐந்து கோடியே ஒரு இலட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து இரு நூற்று இருபத்தி இரண்டு மட்டும்)** மிகாமல் கணினி மயமாக்க இவ்வாணையின் இணைப்பில் காணும் செலவினங்களுக்குட்பட்டும் கீழே (i) முதல் (viii) வரையில் காணும் இனங்களில் கூறப்பட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டும் அரசால் அனுமதியளிக்கப்படுகிறது:-

(i) அகலக்கற்றை (Broad band) மின்னணுத் தொடர்பு ஓராண்டு வரையிலும் இரண்டாம் ஆண்டு முதல் தமிழ்நாடு மாநில பரவலான பகுதிக்கான மின்வலை இணைப்பின் (Tamil Nadu State Wide Area Network – TNSWAN) மூலம் பெற்று பயன்படுத்தப்பட வேண்டும்;

(ii) மென்பொருட்தயாரிப்புச் செலவு ரூ.20 இலட்சத்திற்கும் மிகாமல் இருத்தல் வேண்டும்;

(iii) இவ்வாரியங்களின் பதிவுருக்களின் விவரங்களை கணினியில் பதிவு செய்வதற்கான (data entry of records) செலவினம் ரூ.30 இலட்சத்திற்கும் மிகாமல் இருத்தல் வேண்டும்;

(iv) 278 சார்நிலை அலுவலகங்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ள லேசர் மின் அச்சியந்திரங்களுக்கு (Laser Printer) பதிலாக "டாட்–மேட்ரிக்ஸ் மின் அச்சு இயந்திரங்கள்" (Dot-matrix printer), வழங்குவதற்கான செலவினம் ரூ.23,60,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(v) இக்கணினி மயமாக்கல் திட்டத்திற்கான செலவு மதிப்பீடு பெருமளவில் இருப்பதால் தமிழ்நாடு மின்னணுவியல் கழகத்திற்கான சேவைக் கட்டணத்தில் மென்பொருள் மற்றும் வன்பொருள் கையாளும் செலவு விகிதம் அதற்கான மதிப்பில் முறையே 5% மற்றும் 10% என்பதற்கு பதிலாக முறையே 2% மற்றும் 5% என்ற விகிதத்தில் அனுமதிக்கப்பட்டு, இதற்கான செலவு ரூ.5,44,722/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்;

(vi) 5 (ஐந்து) ஆண்டுகளுக்கான மொத்த வருடாந்திர பராமரிப்புச் செலவு ரூ.53,65,600/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இவற்றில், வன்பொருள் பராமரிப்புச் செலவு 4–ஆம் மற்றும் 5–ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் ரூ.4,27,200/–க்கு மிகாமலும்; கணினி உப பொருட்கள் பராமரிப்புச் செலவு 2–ஆம் ஆண்டு முதல் 5–ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் ரூ.3,85,000/–க்கு மிகாமலும்; பயன்பாட்டு மென்பொருள் (Application software) பராமரிப்புச் செலவு 2–ஆம் ஆண்டு முதல் 5–ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் ரூ.1,20,000/–க்கு மிகாமலும்; இணையதள வெளியீட்டுச் செலவு (Hosting charges) ஒவ்வொரு ஆண்டின் தொடரும் செலவினம் ரூ.5,00,000/–க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்;

(vii) தமிழ்நாடு மின்னணுவியல் கழகத்தால் வழங்கப்படும் கணினிப் பயன்பாட்டுத் திறம் படைத்த பணியாளர்களை இவ்வாரியங்களின் அலுவலகங்களுக்கு இரண்டாண்டு காலம் நியமிப்பதற்கு பதிலாக ஓராண்டு காலம் நியமனம் செய்யும் செலவினம் ரூ.121 இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். ஓராண்டிற்கு பிறகு சம்பந்தப்பட்ட வாரியங்களின் பணியாளர்களே கணினிப் பயன்பாட்டிற்கு உபயோகிக்கப்பட வேண்டும்;

(viii) கணினியின் வன் பொருட்கள் மற்றும் உப பொருட்கள் வைத்து உபயோகிக்கத் தேவையான மேசை, நாற்காலி போன்ற அறைக்கலப் பொருட்கள் வாங்குவதற்கான செலவினம் ரூ.7.05இலட்சத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

**5.** மேலே பத்தி நான்கில் ஆணையிடப்பட்டுள்ளபடி அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் அலுவலகங்களை கணினி மயமாக்குவதற்கான செலவினம் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம் ஆகிய வாரியங்கள் தமது சொந்த நிதியிலிருந்து முறையே **80 : 20** என்ற விகிதத்தில் மேற்கொள்ள வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

**6.** மேற்கூறப்பட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் அலுவலகங்களை கணினி மயமாக்குவதை தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் தயாரித்துள்ள செயல்திட்டத்தின்படி மேலே பத்தி நான்கில் காணும் ஆணைக்குட்பட்டு செயல் படுத்திட தொழிலாளர் ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**7.** இந்த அரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. (அ.சா.குறிப்பு எண்.5271/தொ(மு)வே.வா/2008, நாள்.31.01.2008).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ரமேஷ் குமார் கன்னா,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்

தொழிலாளர் ஆணையர், சென்னை– 600 006.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின்னணுவியல் கழகம், சென்னை – 600 035.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், சென்னை – 600 034.
செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம், சென்னை – 600 102.
செயலாளர், தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம், சென்னை – 600 102.
செயலாளர், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம், சென்னை – 600 102.
செயலாளர், தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம், சென்னை – 600 102.
செயலாளர், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம், சென்னை – 600 102.
செயலாளர், தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு நெசவுத் தொழிலாளர் நல வாரியம், சென்னை – 600 102.
செயலாளர், தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியம், சென்னை – 600 102.
செயலாளர், தமிழ்நாடு ஓவியர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம், சென்னை– 600 102.
செயலாளர், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம், சென்னை – 600 102.
செயலாளர், தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம், சென்னை 600 102.
தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர், சென்னை – 600 005,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

மாநிலக் கணக்காயர், சென்னை – 600 018.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை – 600 018.
மாநிலக் கணக்காயர் (உ.த.பி), சென்னை – 600 009.
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள்.
அனைத்து கருவூல அலுவலர்கள்.

நகல்:-
தகவல் தொழில்நுட்பத் துறை, சென்னை – 600 009.
நிதித் துறை, சென்னை – 600 009.
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள்.
அரசுச் செயலாளரின் நேர்முகச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 600 009.
அரசு தலைமைச் செயலாளரின் நேர்முகச் செயலாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு நிதி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 600 009.
தமிழ்நாடு தகவல் ஆணையம், சென்னை – 600 018.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசுச் சார்புச் செயலாளர் / பிரிவு அலுவலர்.

## இணைப்பு

**அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் அலுவலகங்களை கணினி மயமாக்குதலுக்காக அனுமதிக்கப்படும் செலவின விவரம்.**

| வ. எண் | பொருள் | அதிகபட்ச செலவினத் தொகை |
|---|---|---|
| (1) | மூலக் கணினி (Server) உபயோகப்பங்கீட்டு செலவினம். | ரூ.5,00,000/– |
| (2) | கணினி, அதற்கான உப பொருட்கள் மற்றும் இணைப்புகளின் செலவினம். | ரூ.2,98,60,100/– |
| (3) | தமிழ்நாடு மின்னணுவியல் கழக சேவைக் கட்டணம் | ரூ.5,44,722/– |
| (4) | முதல் 5 ஆண்டுகளுக்கான வருடாந்திர பராமரிப்புச் சேவை கட்டணச் செலவினம் (வன்பொருள் மற்றும் உபபொருள், மென்பொருள் பராமரிப்புச் செலவு மற்றும் இணைய தள உபயோகச் செலவு) | ரூ.53,65,600/– |
| (5) | பயிற்சிக்கான செலவினம் | ரூ.5,80,000/– |
| (6) | மென்பொருள் நிறுவுதல் தொடர்பான செலவினம் | ரூ.5,00,000/– |
| (7) | மனித ஆற்றலுக்கான செலவினம் | ரூ.1,20,88,800/– |
| (8) | அறைக்கலப் பொருட்கள் | ரூ.7,05,000/– |
| | மொத்த செலவினம் | ரூ.5,01,44,222/– |

ரமேஷ் குமார் கன்னா,
அரசுச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.